# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 11.02.2011 அன்று
## ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் அதிகாரம் அல் பக்கராவின் 154 முதல் 158 வரையுள்ள வசனங்களை ஓதினார்கள்:**

**பொருள்: நம்பிக்கை கொண்வர்களே! பொறுமை, தொழுகை ஆகியவற்றின் மூலம் அல்லாஹ்விடம் உதவி கோருங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கின்றான்.**

**அல்லாஹ்வின் வழியில் கொல்லப்படுகிறவர்களை இறந்தவர்கள் எனக் கூறாதீர்கள், மாறாக அவர்கள் உயிருள்ளவர்களே. ஆனால், நீங்கள் உணர்ந்து கொள்வதில்லை.**

**ஓரளவு பயத்தாலும், பசியாலும், செல்வம், உயிர்கள், கனி வகைகள் ஆகியவற்றின் இழப்பாலும் நிச்சயமாக நாம் உங்களைச் சோதிப்போம். மேலும் பொறுமையாளர்களுக்கு நீர் நற்செய்தியை கூறுவீராக.**

**அவர்கள், தங்களுக்கு துன்பம் ஏற்படும் போது, நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள், அவனிடமே திரும்பிச் செல்பவர்கள் எனக் கூறுவார்கள்.**

**இத்தகைய மக்களுக்கே தங்களின் இறைவனிடமிருந்து அருளும் கருணையும் கிடைக்கின்றது. இவர்களே நேர்வழி பெற்றவர்கள். (2:154-158)**

கடந்த சில நாட்களாக இந்தோனேஷியாவில் அஹ்மதிய்யத்தின் எதிரிகள் தங்களது மிருகத்தனமான, கொடூரமான செயல்களை வெளிப்படுத்திக் காட்டியவாறு மூன்று அஹ்மதிகளை ஷஹீதாக்கியுள்ளனர். இதனால் ஒவ்வொரு அஹ்மதியும் துக்கத்தில் உள்ளனர். ஆனால், எப்போதும் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு ஏற்ப செயல்பட்டாவாறு ஜமாஅத் அளவிலும், தனிநபர் என்ற நிலையிலும் ஒவ்வொரு அஹ்மதியும் ஒரு நம்பிக்கையாளர் என்ற நிலையில் பொறுமையைக் கடைபிடித்தவாறு தங்களுக்கு ஏற்படுகின்ற உயிர், பொருள் மற்றும் எல்லாவிதமான இழப்புகளையும் அல்லாஹ்வின் திருப்தியில் திருப்தியடைந்தவாறு சகித்துக் கொள்வதைதான் தங்களது வழிமுறையாக ஆக்கிக் கொண்டார்கள். மேலும் இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன் – நிச்சயமாக நாங்கள் அல்லாஹ்வுக்கே உரியவர்கள்; அவனிடமே திரும்பிச் செல்பவர்கள் ஆவோம் என்று அவர்கள் கூறுகின்றார்கள். இதனையே நம்பிக்கையாளர்களின் அடையாளமாக அல்லாஹ் குறிப்பிடுகின்றான்.

நான் ஓதிய இந்த வசனங்களை இன்று அஹ்மதிகளைவிட அதிகமாக வேறு யாரால் புரிந்து கொள்ள முடியும்? எதிரிகள் மீண்டும் மீண்டும் நம்மிடத்தில் கடுமையாக நடந்து கொள்கின்றனர். நாம் மீண்டும் மீண்டும் இந்த வசனங்களை நம் கண்முன் வைத்தவாறு அவற்றை மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டிருக்கின்றோம். இந்தோனேஷியாவிலுள்ள அஹ்மதிகளாயினும் சரி, அல்லது பாகிஸ்தானிலுள்ள அஹ்மதிகளாயினும் சரி அல்லது வேறு எந்த நாட்டைச் சார்ந்த அஹ்மதிகளாயினும் சரி அவர்கள் செய்கின்ற உயிர், பொருள் தியாகங்களில் ஒரு நம்பிக்கையாளருக்குள்ள மகிமையை அவர்கள் வெளிப்படுத்திக் காட்டுகின்றார்கள். அத்தகைய ஒரு ஆன்மாவை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பர் ஒவ்வொரு அஹ்மதியின் உள்ளத்திலும் ஏற்படுத்தியுள்ளார்கள். ஒவ்வொரு இடத்திலும் இருக்கின்ற அஹ்மதிகளிடமும் இந்த ஆன்மா இருப்பதை நாம் பார்க்கின்றோம். இறைவனுக்காக தமக்கு ஏற்படுகின்ற இழப்புகளையும் இறைவனுக்காக தங்களிடம் கோரப்படுகின்ற தியாகங்களையும் சகித்துக் கொண்டு எந்த பதிலை நாம் கூற வேண்டும் என்ற போதனை நமக்கு தரப்பட்டுள்ளதோ அதை நாம் கூறுகின்றோம். நமது எஜமானரும் தலைவருமான ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களும் தனது செயல் மூலமாக இந்த பதிலைக் கூறும்படியே நமக்கு கட்டளையிட்டுள்ளார்கள். இதே ஆன்மாவைத்தான் அன்னார் தமது தோழர்களிடமும் ஏற்படுத்தியிருந்தார்கள். நபித்தோழர்கள் இதற்கான செயல் அளவிலான முன்மாதிரியை வெளிப்படுத்திக் காட்டினார்கள். இன்னும் சொல்வதென்றால் ஒவ்வொரு நபியையும் ஏற்றுக் கொண்டவர்களை வாழவிடாமல் எதிரிகள் அவர்களுக்கு

தொல்லை கொடுத்த போதும், ஒவ்வொரு காலத்தில் வாழ்ந்த ஃபிர்அவ்னும் நம்பிக்கை கொண்டவர்களிடம் நீங்கள் உயிரை விட்டு விட வேண்டும் அல்லது உங்களது ஈமானிலிருந்து விலகிச் சென்றுவிட வேண்டும். இரண்டில் ஒன்றை நீங்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையை வைத்த போதும் நம்பிக்கை கொண்டவர்கள் எப்போதும் தங்களது ஈமானின் வலிமையையே வெளிப்படுத்திக் காட்டினார்கள்.

ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் காலத்திலும் மாயவித்தைக்காரர்களுக்கு அவர்களது மாயவித்தைக்கு எதிரில் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் எதை எடுத்து வைத்துள்ளார்களோ அது உலகில் தென்படும் மாயவித்தை அல்ல. மாறாக அது இறை உதவியாகும். இது எப்படிப்பட்ட அடையாளம் என்றால் இதனை உலக திட்டங்களால் எதிர்த்து நிற்க முடியாது என்ற உண்மையை அவர்கள் புரிந்து கொண்டதும், ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் நமக்கு வழங்கிய தூதுச் செய்தி இறைவனின் தூதுச் செய்தியாகும் என்பதை உணர்ந்து அவர்கள் அதனை ஏற்றுக் கொண்டார்கள். இதன் காரணமாக ஃபிர்அவ்னின் கண்ணியத்திற்கு அவமரியாதை ஏற்பட்ட போது, கோபத்தால் அவனது முகம் சிவந்து விட்டது. உங்களது இந்த செயலுக்காக நான் எத்தகு படிப்பினைக்குரிய தண்டனையை உங்களுக்கு தருவேன் என்றால், அது எப்போதும் உங்கள் நினைவில் இருக்கும் என்று ஃபிர்அவன் கூறினான். அதற்கு நாங்கள் இறைவனின் அடையாளங்களை விடவும் உனக்கு முதன்மை அளிக்க மாட்டோம். இறைவன் மீது எங்களுக்கு உள்ள நம்பிக்கையை விடவும் உனக்கு முதன்மை அளிக்கமாட்டோம்.

எங்களது ஈமானிலிருந்து எங்களை விலக்குவதற்காக உன்னால் இயன்றதை நீர் செய்து கொள். உன்னால் எங்களது இவ்வுலக வாழ்க்கையைத்தான் முடிவுக்கு கொண்டு வர முடியும் என்பதே நம்பிக்கை கொண்டவர்களின் பதிலாக இருந்தது.

இறைவனுக்காக நாங்கள் செய்த தியாகத்திற்குப் பதிலாக எங்களுக்கு கிடைப்பது அதை விட மிகப் பெரியதாகும். அதை உனது அரசாட்சி கற்பனை செய்து கூட பார்க்க முடியாது என்றே அவர்கள் கூறினர். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்களால் இத்தகைய ஈமானை வெளிப்படுத்திக் காட்ட முடியும் என்றால் தூதர்களில் சிறந்தவரும் காத்தமுல் அன்பியாவாகவும் இருக்கின்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொண்டுள்ள நாம் அவர்கள் மீது இறங்கிய முழுமையான ஷரீஅத்திற்கு ஏற்ப செயல்படுவதன் மூலம் ஈமானின் இறுதி எல்லையை அடைந்துவிட முடியும். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கு ஏற்ப தோன்றிய அந்த முஹம்மதிய மஸீஹை ஏற்றுக் கொண்டவர்களாகவும் நாம் இருக்கின்றோம். அவர்கள் கார்த்திகை நட்சத்திரத்தை அடைந்து விட்ட ஈமானை மீண்டும் பூமிக்கு கொண்டு வந்து தொடர்ச்சியான அடையாளங்கள் மூலம் மீண்டும் நமது ஈமானுக்கு வலுவூட்டினார்கள். நாம் இன்றைய ஃபிர்அவ்ன்கள் அல்லது ஃபிர்அவ்னின் சீடர்களுக்கு அஞ்சி நமது ஈமானை வீணாக்கி விடுவோமா? நமக்கோ இறைவன், **வபஷ்ஷிரிஸ் ஸாபிரீன் – பொறுமையாளர்களுக்கு நீர் நற்செய்தியைக் கூறுவீராக** என்ற நற்செய்தியை வழங்குகின்றான். நமது பொறுமையை வெளிப்படுத்திக் காட்டி நமது உயிரை காணிக்கையாக அவன் முன்னால் வைத்திருப்பதைப் பார்த்து நமக்கு நிரந்தர வாழ்விற்கான நற்செய்தியை அவன் வழங்குகின்றான். எவர்கள் தங்களது ஈமானின் இத்தகைய நிலையை அடைந்து விட்டார்களோ மிரட்டல்கள் அவர்களது நல்ல நோக்கங்களிலிருந்தும் அவர்களை விலக்கிவிட முடியாது. அவ்வாறே எல்லை மீறிய அநியாயமான கொடூரமான செயல்களைச் செய்வதன் மூலம் அவர்களை தங்களது ஈமானில் நிலைத்திருப்பதிலிருந்தும் தடுக்க முடியாது.

அஹ்மதிய்யத்தின் எதிரிகளே! உலகின் எந்த மூலையில் நீங்கள் இருந்தாலும் நான் உங்களிடம் கூறிக் கொள்கிறேன். அஹ்மதிகள் மீது என்ன கொடுமைகள் செய்ய முடியுமோ அதை செய்து கொள்ளுங்கள். ஆனால் எங்களை எங்களது ஈமானிலிருந்து ஒருபோதும் உங்களால் விலக்கி விட முடியாது. ஒவ்வொரு இடத்திலும் வாழ்கின்ற அஹ்மதிகளிடமிருந்தும், **நீங்கள் உங்களால் இயன்றதை செய்து கொள்ளுங்கள். ஆனால் உங்களால் எங்களை எங்களது ஈமானிலிருந்து விலக்கிவிட முடியாது. இன்ஷா அல்லாஹ் என்ற பதிலையே நீங்கள் கேட்பீர்கள்.**

இந்தோனேஷியாவிலுள்ள அஹ்மதிகளும் எதிரிகளுக்கு இந்த பதிலைத்தான் தந்தார்கள். இதற்கு முன்னரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் இவர்களுக்கு மிரட்டல்கள் வந்து கொண்டிருந்தது. ஆனால் ஈமானின் செல்வத்தால் நிறைந்திருந்த இவர்கள் இந்த மிரட்டல்களுக்கு சிறிதும் கவலைப்படவில்லை. இந்த சம்பவம் எந்த ஜமாஅத்தில் நடந்ததோ அந்த ஜமாஅத் சிறிய ஜமாஅத்தாகும். பெண்கள், குழந்தைகள் ஆகியோரையும் சேர்த்து மொத்தம் 30 நபர்களை மட்டும் கொண்ட ஜமாஅத்தாக அது இருந்தது. அந்த ஜமாஅத்தில் 7 குடும்பங்கள் மட்டுமே இருந்தது. ஆனால் இவர்கள் எல்லாருமே ஜமாஅத்திலிருந்து தாங்கள் விலகிவிட்டதாக அறிவிக்க வேண்டும் என்று எதிரிகள் கூறியதற்கு சிரம்பணிய மறுத்து விட்டனர். இந்த பெயர் தாங்கி முல்லாக்களின் பின்னால் செல்வதற்கு மறுத்து விட்டனர். உங்களது முஅல்லிமை இங்கிருந்து வெளியேற்றி விடுங்கள் என்பதுதான் முல்லாக்களின் சீடர்களின் மிகப்பெரிய கோரிக்கையாக இருந்தது. அங்கிருக்கும் முஅல்லிமும் வெளியூரிலிருந்து வந்தவரல்ல. மாறாக, அவர் அதே கிராமத்தில்தான் வாழ்ந்து வந்தார். அதே ஊரைச் சேர்ந்தவராகவே அவர் இருந்தார். எவ்வாறிருப்பினும், எதிர்ப்பு அளவு கடந்து விட்ட போது, அருகிலுள்ள ஜமாஅத்துகளிலிருந்து பல்வேறு சந்தர்ப்பங்களில் 20 குத்தாம்கள் டியூட்டி கொடுப்பதற்காக அங்கு வந்தார்கள். அந்த குத்தாம்கள் அங்குள்ள மி-ன் ஹவுஸில் உட்கார்ந்திருப்பார்கள். எவரும் மிஷன் ஹவுஸைக் கைப்பற்றி விடக்கூடாது என்பதற்காக அவர்கள் அங்கு அமர்ந்திருப்பார்கள். ஏனென்றால், பொதுவாக இந்த எதிரிகளுக்கு காவல்துறையினரின் ஆதரவு இருந்து வந்தது. இவர்கள் கூறியதற்கிணங்க அல்லது மேலதிகாரிகள் கூறியதற்கிணங்க நாம் நமது ஏதாவதொரு வீட்டை அல்லது மிஷன் ஹவுஸை அல்லது பள்ளிவாசலை காலி செய்து விட்டால், நம்மிடம் இவ்வாறு செய்யும் படி கூறிய இவர்களே அவற்றில் பூட்டை போட்டு பூட்டி சீல் வைத்து விடுவார்கள். அல்லது மக்கள் அந்த இடங்களை கைப்பற்றிக் கொள்கின்றார்கள். நம்முடன் இவர்கள் நடந்து கொள்ளும் விதம் இப்படித்தான் இருந்திருக்கின்றது. எதிரிகள் இந்த இடங்களை அவர்களே கைப்பற்றிக் கொண்டாலும் பொறுப்பிலுள்ள அதிகாரிகள் அவர்களிடம் அந்த இடங்களை காலி செய்ய வைப்பதில்லை. கடந்த பல வருடங்களாக இந்த அனுபவம் நமக்கு கிடைத்திருப்பதால் நாம் நமது இடத்தை காலி செய்து விட்டு செல்லக் கூடாது என்று நாம் முடிவெடுத்தோம். என்ன நடந்தாலும் அதை சகித்துக் கொள்ள வேண்டும் என்று நாம் முடிவெடுத்தோம். நமது சகோதரர்கள் மிஷன் ஹவுஸிற்கு உள்ளே அமர்ந்திருந்தார்கள்.

இந்த அநியாயக்காரர்கள் மிஷன் ஹவுஸிற்கு உள்ளே தாக்குதல் நடத்தியபோது, கத்திகள், பட்டா கத்திகள், கம்புகள் ஆகியவற்றால் தாக்குதல் நடத்தி அஹ்மதிகளை வெளியே இழுத்துக் கொண்டு வந்தனர். போலீஸும் வெளியில் நின்றவாறு இந்த எல்லா விஷயங்களையும் பார்த்துக் கொண்டிருந்தது. எதிரிகள் மூன்று அஹ்மதிகளை ஷஹீதாக்கினார்கள். ஐந்து அஹ்மதிகளை காயப்படுத்தினார்கள். எல்லாரும் இந்த செய்தியைக் கேட்டுள்ளீர்கள். இவ்வாறிருந்தும் கூட எல்லா அஹ்மதிகளின் ஈமானின் நிலைமையும் முன்பு இருந்தது போன்றே வலுவாக இருக்கின்றது. இன்னும் சொல்வதென்றால் முன்பை விட அதிகமாக அவர்களது ஈமான் வலுவாக இருக்கின்றது. இவை எல்லாமே மிகவும் கொடூரமான வழிமுறைகளை மேற்கொண்டவாறு செய்யப்பட்டுள்ளது. அறியாமை காலத்தில் வாழ்ந்த காஃபிர்களின் செயல் நிலைநாட்டப்பட்டிருக்கின்றது.

இந்த கொடிய பெயர்தாங்கி முஸ்லிம்கள் எப்போதும் போன்றே அந்த ரஹ்மத்துல் லில் ஆலமீனின் பெயரால் இதை செய்தார்கள் என்பதுதான் வேதனைக்குரிய விஷயமாகும். அவர்களோ கருணையை வழங்குவதற்காகவே வந்தார்கள். எந்த மகத்தான நபி போரில் ஈடுபடுபவர்கள் கூட சில வழிமுறைகளை கடைபிடிக்க வேண்டும் என்று கூறியிருந்தார்களோ, அதாவது போரில் கொலை செய்யப்பட்ட குற்றவாளிகளின் சடலங்களை சிதைக்கக் கூடாது என்று கட்டளையிட்டார்கள். அக்காலத்தில் அரபு மக்களிடம் அது பொதுவான ஒரு வழக்கமாக இருந்தது. ஆனால் உயிரற்ற சடலங்களை அவமரியாதை செய்வது எவ்வகையிலும் பொருத்தமான செயல் ஆகாது. மதங்கள் ஒருபுறமிருக்கட்டும். மனிதத் தன்மையின் மிக சாதாரணமான கொள்கைகளுக்கும் கூட இது எதிரானதாக இருக்கின்றது. ஆனால், நமது அஹ்மதிகள் மீது தாக்குதல் நடத்திய இந்த அநியாயக்காரர்கள் எந்த அளவு கொடூரமான முறையில் சடலங்களை அவமரியாதை செய்துள்ளனர் என்றால் அந்த சடலங்கள் அடையாளம் தெரியாமல் ஆகிவிட்டன. எனக்கு முதலில் வந்த அறிக்கையில்

தவறுதலாக வேறு சிலரின் பெயர்கள் தரப்பட்டது. பிறகு மீண்டும் அந்த சடலங்களை அடையாளம் கண்டு கொண்ட பிறகுதான் அது நாம் அறிக்கையில் குறிப்பிட்ட நபர்கள் அல்ல. மாறாக அவர்கள் வேறு நபர்கள் ஆவர் என்பது அவர்களுக்கு தெரிய வந்தது. அந்த ஷஹீதுகளின் உறவினர்கள் வந்து பார்த்த பிறகு பல்வேறு அடையாளங்கள் மூலம் அந்த சடலங்களை அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது. இந்த எதிரிகள் சடலங்களை அவமரியாதை செய்வதில் காஃபிர்களை தோல்வியடையும் படி செய்து விட்டார்கள். நமது உள்ளம் இவர்களது இந்த செயலால், நமது அன்பர்களின் சடலங்களை அவமரியாதை செய்த இவர்களின் இந்த செயலால் துக்கத்தில் ஆழ்ந்துள்ளது என்பது உண்மைதான். அதனால் நமது உள்ளம் அமைதியிழந்து விட்டது.

ஆனால், இவர்கள் செய்த மிகவும் கொடூரமான செயல் என்னவென்றால் நான் ஏற்கனவே கூறியது போன்றே இந்த எல்லா செயல்களையும் இவர்கள் நமது எஜமானரும் தலைவரும் மனிதர்களுக்கு நன்மைகளை செய்வதற்காக வந்த அகிலங்களுக்கெல்லாம் அருட்கொடையாக வந்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெயரால் செய்துள்ளார்கள். அது எந்த அளவு கொடூரமான செயல்களாக இருந்தது என்றால் நாட்டின் செய்தித்துறையும், வெளிநாடுகளிலுள்ள செய்தித் துறையும் இதைப் பற்றிய செய்தியை வெளியிட்டு விட்டு இந்த சம்பவம் தொடர்பான வீடியோ காட்சிகளைக் காட்டவில்லை. மனிதத் தன்மையை முற்றிலும் குழிதோண்டி புதைக்கின்ற இத்தகு காட்சிகளை எங்களால் காட்ட முடியாது என்று அவர்கள் அதற்கான காரணத்தையும் கூறியுள்ளார்கள். பொதுவாக, அல் ஜெஸீரா சேனல் இப்படிப்பட்ட செய்திகளை வழங்கி வருகிறது. இதைப் பற்றிய செய்திகளை அந்த சேனலும் கூட ஒன்றும் கூற முடியாமல் இருந்து விட்டது. அல்ஜெஸீரா சேனல் தமது செய்தியில் இது மிகவும் பயங்கரமான வேதனை நிறைந்த காட்சியாக இருந்தது என்று கூறியது. போலீஸ் நின்று கொண்டிருந்தனர். ஒரு ஊர்வலத்தில் வந்தவர்கள் அஹ்மதிகளின் வீடுகள் மீது தாக்குதல் நடத்தினார்கள். பிறகு கொலை வெறித் தாக்குதல் ஆரம்பமானது. அவர்கள், மூன்று நபர்களை நிர்வாணமாக ஆக்கி அவர்கள் கற்களாலும், தடிகளாலும், கத்திகளாலும், ஈட்டிகளாலும் தாக்கினார்கள் என்று அல் ஜெஸீரா செய்தி வெளியிட்டது. மேலும் இந்த சம்பவம் தொடர்பாக புகைப்படங்கள் காட்டுவதற்கு தகுந்தவையாக இல்லை என்றும் அது கூறியது.

ஆசிய நாடுகளுக்கான மனித உரிமைக் கழகம் கூறும் போது, அஹ்மதிகளுக்கு எதிராக நடந்துள்ள இந்த அநியாயமான செயல்களை உள்ளூர் மக்கள், இந்தோனேஷியா உலமா சபையின் தீர்ப்பிற்கேற்ப சரியானதாக கருதுகின்றனர் என்று கூறியுள்ளது. உள்ளூர் மக்கள் என்பதன் கருத்து, இந்த அநீதியான செயல்களை செய்தவர்களே இந்த தீர்ப்பைக் கூறி இந்த ஆலிம்கள் ஆயிரம் வருடங்களுக்கு முன்னதாக அறியாமைக் காலத்தில் செய்யப்பட்ட செயல்களைச் செய்யும்படி முஸ்லிம்களுக்கு ஆர்வமூட்டுகின்றார்கள்.

**THE ECONOMIST பத்திரிகை இவ்வாறு எழுதியுள்ளது:**

இந்த அநீதி முஸ்லிம்களுக்கும், கிறித்தவர்களுக்கும் இடையில் நடைபெற்ற சண்டையால் ஏற்படவில்லை. மாறாக, முஸ்லிம்கள் என்று தங்களை கூறிக் கொள்பவர்கள், முஸ்லிம்களுடன் இவ்வாறு நடந்து கொண்டிருக்கிறார்கள். எவரிடமாவது இந்த கொடூரமான செயல் தொடர்பாக புகைப்படத்தை பாப்பதற்கான ஆற்றல் இருந்தால் அவர் இன்றைய படித்த நாகரிக உலகிலுள்ளவர்களை விட்டும் வெகுதூரம் சென்று விட்ட காட்டுமிராண்டித்தனமான செயலாக அது இருந்தது என்பதை தெரிந்து கொள்வார் என்றும் அது எழுதியுள்ளது. இந்த கொடூரமான செயல் ஏனைய நகரங்களில் வாழ்பவர்களைக் கூட குலுக்கி விட்டது என்றும் அது எழுதியுள்ளது.

நமது அஹ்மதி சகோதரர்கள் பலரும் இந்த சம்பவம் தொடர்பான வீடியோவை பார்த்திருக்கின்றார்கள். யார் இது தொடர்பாக எனக்கு எழுதியிருந்தாலும் ஒரு சில நிமிடங்களுக்கு மேல் அதை எங்களால் பார்க்க முடியவில்லை என்றே எழுதியுள்ளார்கள்.

ஒரு பெண் இவ்வாறு எழுதியுள்ளார்: எனது குழந்தைகளுக்கு தெரியாமல் நான் இந்த காட்சியைப் பார்த்து அழ ஆரம்பித்தேன். அப்போது என்னைப் பார்த்த குழந்தைகள் என்ன காரணத்திற்காக நமது தாயார் அழுகின்றார்கள் என்று தெரியாமல் கவலை அடைந்தனர்.

ஒரு அல்ஜீரியன் அஹ்மதி என்னிடம் வந்தார். அவர் இந்த விஷயத்தை என்னிடம் கூறியவாறு குலுங்கி குலுங்கி கதறி அழ ஆரம்பித்து விட்டார். ஆக, அந்தக் காட்சி எவ்வளவு பயங்கரமானது என்றால் அதை பார்க்கின்ற மனிதரால் சகித்துக் கொள்ள முடியாது. ஆனால், இந்த எதிரிகள் தங்களது பிள்ளைகளின் உள்ளத்தைக் கூட எந்த அளவு கடினமாக ஆக்கி விட்டார்கள் என்றால் அவர்கள் நின்று கொண்டு இருக்கும் போதே இந்த எல்லா காட்சிகளையும் பார்த்து கைதட்டி ஆரவாரம் செய்து கொண்டிருந்தார்கள். நியூயார்க் டைம்ஸ் மற்றும் ஃபைனான்சியல் டைம்ஸ் போன்ற செய்தித்தாள்களும் இதே போன்ற செய்தியை வெளியிட்டுள்ளது.

ஜகார்தா போஸ்ட் என்பது அங்குள்ள ஒரு பத்திரிகையாகும். அதில் கட்டுரை எழுதும் ஒருவர் ஒரு கட்டுரையை எழுதியுள்ளார். அதில் அவர் இவ்வாறு எழுதுகின்றார். அஹ்மதிய்யா ஜமாஅத்தைச் சேர்ந்த நபர்கள் மீது புதிய தாக்குதல் எந்த காரணத்திற்காக செய்யப்பட்டிருந்தாலும் நமது சமுதாயத்தில் உள்ளவர்களுக்கு சிறுபான்மையாக இருக்கின்ற மக்கள் தொடர்பாக எந்த வகையிலும் நாகரீகமான நல்ல உணர்வுகளும் எண்ணங்களும் இல்லை என்பதையே அது காட்டுகின்றது. ஆனால், அஹ்மதிகளும் மற்ற மதப்பிரிவும் நாட்டின் வளர்ச்சியில் சரிசமமாக பெரும் பங்கு வகித்துள்ளனர். இந்தோனேஷியாவை உருவாக்குவதில் இவர்களின் பங்கு இருக்கின்றது. இந்த வேதனை நிறைந்த சம்பவம் இந்தோனேஷியாவின் வரலாற்றிலிருந்தும் அழிக்க முடியாத ஒரு பகுதியாக இருக்கும் என்றும் அவர் எழுதியுள்ளார். எவர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் போதனைகள் இஸ்லாத்திற்கு புறம்பானது. எனவே, வாழ்வதற்கான உரிமை இவர்களுக்கு இல்லை என்று கூறுகின்றார்களோ இவர்கள் எல்லாருமே நேர்வழியிலிருந்தும் வழிதவறிச் சென்று கொண்டிருக்கின்றார்கள். அல்லது இவர்கள் வழிதவறிச் செல்ல வைக்கப்பட்டுள்ளார்கள். இருபதாம் நூற்றாண்டின் புதிய சிந்தனைகளை, முன்னேற்றத்தை விரும்பும் சிந்தனைகளை அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அறிஞர்கள்தான் இந்தோனேஷியாவிற்கு தந்துள்ளார்கள் என்று அவர் எழுதுகின்றார். ஜனாதிபதி சகோர்னா உட்பட நமது தலைவர்கள் பலரும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அறிஞர்களால் எழுதப்பட்ட திருக்குர்ஆனின் மொழியாக்கத்தையே படித்து வந்தனர். திருக்குர்ஆனை இவர்கள் மூலமாகத்தான் புரிய முடிந்தது. இதனால் அவர்களின் அறிவில் வளர்ச்சி ஏற்பட்டது என்றும் அவர் எழுதியுள்ளார்.

தொடர்ந்து எழுதுகின்றார்: நிச்சயமாக நாம் இந்த சிறுபான்மையினராக இருக்கின்ற மக்களுக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கின்றோம். அஹ்மதிய்யா ஜமாஅத் இந்த நாட்டிற்காக செய்துள்ள தொண்டுகள் விலைமதிக்கத்தக்கவையாகும். இதுதான் அந்த கட்டுரையின் சுருக்கமாகும். இதை எழுதிய யோகா யகார்தா என்பவர் இஸ்லாமிய பல்கலைக்கழகத்தின் Lecturer ஆவார்.

ஜகார்தா போஸ்ட் மற்றும் ஜகார்தா குலோப் போன்ற பத்திரிகைகள் இந்த சம்பவம் தொடர்பாக செய்திகளை வெளியிட்டிருக்கின்றன. மேலும் கடுமையாக இந்த செயல்களுக்கு கண்டனம் தெரிவித்துள்ளன. மேலும் இதுபற்றி அரசாங்கத்திற்கு கவனமூட்டியிருக்கின்றன. அங்குள்ள மீடியாக்களிலும் படித்த மக்களிடமும் குறைந்தபட்சம் இந்த அநீதிக்கு எதிராக குரல் கொடுப்பதற்கும் அதுபற்றி பேசுவதற்கும் உள்ள தைரியமாவது இருக்கின்றது. இதன் மூலம் சமுதாயம் சிறந்து விளங்கும் என்ற நம்பிக்கையை நாம் வைக்க முடியும்.

இப்படிப்பட்ட தைரியம் பாகிஸ்தானிலுள்ள படித்த மக்களிடம் உருவாகி விட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும். அங்குள்ள செய்தி நிறுவனங்களிடம் இந்த தைரியம் உருவாகி விட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும். இந்தோனேஷியாவில் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு இருந்து வரும் எதிர்ப்பு புதிதான ஒன்றல்ல. எவ்வாறு, எப்போதும் இறைவனின் ஜமாஅத்துகளுக்கு எதிராக தீமையைத் தூண்டுகின்ற சக்திகளின் பரிமாற்றம் இருந்து வந்துள்ளதோ அவ்வாறே அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீதும் ஏதாவதொரு வகையில் குறிப்பாக இஸ்லாமிய நாடுகளில் எதிர்ப்பு இருந்து வந்தது. இப்போதும் எதிர்ப்பு இருந்து வருகிறது. எப்போதும் முல்லாக்கள் நேர்வழியிலிருந்தும் மக்களை விலக்கி வைத்தார்கள். ஜமாஅத்தை எப்போதும் அவர்கள் எதிர்த்து வந்தார்கள். எந்த நாட்டைச் சேர்ந்த முல்லாவாக இருந்தாலும் அவர்கள் இந்த பணியை குத்தகைக்கு எடுத்துள்ளார்கள். அவர்கள் உண்மையை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. ஏனென்றால், இதில் அவர்களின் சுய பயன்கள் அடங்கியிருக்கின்றது. அவர்கள் உண்மையை ஏற்றுக் கொண்டால் அவர்களுக்குள்ள உணவு

இல்லாமல் ஆகிவிடும் என்பதை அவர்கள் அறிந்துள்ளார்கள். அவர்களது வருமானம் முடிந்து விடும். அவர்களது அறிவின் உண்மையான நிலை வெளிப்பட்டு விடும் என்பதும் அவர்களுக்கு தெரியும்.

இன்று நான் இந்தோனேஷியா ஜமாஅத்தின் சுருக்கமான ஆரம்பகால வரலாற்றையும் ஜமாஅத்தின் மீது இழைக்கப்பட்ட அநீதிகள் பற்றியும் கூறுகின்றேன். அதற்கு பிறகு ஷஹீதுகள் பற்றியும் கூறுவேன்.

இந்தோனேஷியாவில் இஸ்லாமிய மறுமலர்ச்சியின் ஆரம்பம் அதாவது அஹ்மதிய்யத்தின் தோற்றம் இறைவனின் திட்டத்திற்கேற்ப மிகவும் வியக்கத்தக்க வகையில் ஏற்பட்டது. இந்த ஜமாஅத்தைச் சேர்ந்த நான்கு நபர்களுக்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைமையகமான காதியானுக்கு நேரில் சென்று அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளும் நற்பாக்கியம் கிடைத்திருக்கின்றது; இந்த நாட்டிற்கு இந்த பெருமை கிடைத்திருக்கின்றது. முதலில் ஜமாஅத்தை நிறுவுவதற்காக எந்த முபல்லிக்கும் இந்தோனேஷியா செல்லவில்லை. மாறாக ஜமாஅத் சகோதரர்கள் நான்கு பேர் தாமாகவே காதியான் வந்தார்கள். அஹ்மதி ஆக வேண்டும் என்ற நோக்கத்திலும் அவர்கள் காதியான் வரவில்லை. மாறாக பல இடங்களிலும் மார்க்கக் கல்வி கற்பதற்காக சுற்றிப் பார்க்க வந்தவர்கள் காதியானிற்கு வந்தார்கள்.

1923 ஆம் ஆண்டு சுமத்ராவைச் சார்ந்த நான்கு இளைஞர்கள்; அதாவது மவ்லவி அபூபக்கர் அய்யூப் சாஹிப், மவ்லவி அஹ்மது நூருத்தீன் சாஹிப், மவ்லவி ஷானி ஹாலன் சாஹிப், மவ்லவி ஹாஜி மஹ்மூது சாஹிப் ஆகியோர் மார்க்கக் கல்வியைக் கற்பதற்காக சுமத்ராவிலிருந்து இந்தியாவிற்கு வந்தனர். இறைவனின் விதியானது அவர்கள் கல்கத்தா, லன்னோ, லாஹூர் ஆகிய இடங்களுக்கு சென்ற பிறகு அவர்களை காதியானுக்கு ஈர்த்து வந்தது. 1923 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் இந்த நான்கு இளைஞர்களும் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம் வந்தார்கள். மேலும் எங்கள் மார்க்கக் கல்வி மற்றும் தர்பிய்யத்திற்கான ஏற்பாட்டைச் செய்யுங்கள் என்று அவர்களிடம் வேண்டினார்கள். ஹுஸுர் (ரலி) அவர்கள் அவர்களது வேண்டுதலை ஏற்றுக் கொண்டு அவர்களது மார்க்கக் கல்விக்கான ஏற்பாட்டை செய்தார்கள். கல்வி கற்றுக் கொண்டிருக்கும் போதே இவர்களுக்கு அஹ்மதிய்யத்தின் உண்மை வெளிப்பட்டது. அவர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார்கள். காதியானில் பைஅத் செய்த இந்தோனேஷிய இளைஞர்கள், பைஅத் செய்த பிறகு அஹ்மதிய்யத்தின் ஒளியின் மூலம் விரைவாக தங்களது நாட்டிற்கும் ஒளியூட்டுவதற்கான முயற்சிகளை செய்தார்கள். காதியானில் இருந்தவாறே அவர்கள் தங்கள் உறவினர்களுக்கு தப்லீக் கடிதங்கள் எழுத ஆரம்பித்தார்கள். இவ்வாறு இந்தோனேஷியாவில் தப்லீகிற்கான வழி திறக்க ஆரம்பித்தது.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் 1924 ஆம் ஆண்டு தமது ஐரோப்பிய சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பிய போது ஹுஸுர் அவர்களை கண்ணியப்படுத்தும் விதமாக ஒரு வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்தோனேஷியாவிலிருந்து வந்திருந்த இந்த மாணவர்கள் இந்த விருந்தின் போது, ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம், கிழக்கிலுள்ள இந்த தீவுகளின் பக்கமும் உங்கள் கவனத்தை செலுத்துங்கள் என்று கூறினார்கள். அப்போது ஹுஸுர் அவர்கள் நானோ அல்லது எனது பிரதிநிதியோ உங்கள் நாட்டிற்கு வருவோம் என்று அவர்களிடம் வாக்குறுதி வழங்கினார்கள். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இதற்காக மவ்லவி ஹஸ்ரத் ரஹ்மத் அலி சாஹிப் அவர்களை தேர்ந்தெடுத்தார்கள். அவர்களை இந்தோனேஷியாவிற்கு அனுப்பி வைத்தார்கள். அவர்கள் கடல் வழியாக கப்பலில் பயணம் செய்து செப்டம்பர் மாதம் 1925 ஆம் ஆண்டு இந்த நாட்டைச் சென்றடைந்தார்கள்.

முதலாவதாக, சுமத்ராவில் ஆசியாவின் ஒரு சிறு ஊரான தான்தன் துவாவிற்கு வந்தார்கள். அங்குள்ள நாகரீகமும் சமுதாய வாழ்க்கையும் வேறு விதமாக இருந்தது. மொழியும் வேற்று மொழியாக இருந்தது. தன்னை அறிந்தவர்கள் எவரும் அங்கு இருக்கவில்லை. இந்த எல்லா ஆரம்ப துன்பங்களும் கடினங்களும் மவ்லவி சாஹிபின் தைரியத்திலும் உறுதியான எண்ணத்திலும் எந்தவொரு வித்தியாசத்தையும் ஏற்படுத்தவில்லை. மொழியைக் கற்றுக் கொண்டதுடன் அவர்கள் தனிப்பட்ட முறையில் தப்லீக் செய்யவும் ஆரம்பித்தார்கள். பிறகு ஆலிம்களுடன் கருத்துப் பரிமாற்றமும் விவாதங்களும் நடக்க ஆரம்பித்தது. மவ்லவி

சாஹிப் அவர்களுக்கு அல்லாஹ் தனது உதவியையும் ஆதரவையும் வழங்கினான். மேலும் சில மாதங்களுக்குள் இந்தோனேஷியாவில் முதலாவது ஜமாஅத் நிறுவப்பட்டது. முதலில் 8 பேர் பைஅத் செய்தார்கள். பிறகு மேலும் பைஅத்துகள் நடந்தன.

ஹஸ்ரத் மவ்லவி சாஹிப் அவர்களுக்கு ஆரம்பத்தில் துன்பங்களை சந்திக்க வேண்டியது வந்தது. மொழிப் பிரச்சனையும் இருந்தது. எதிர்ப்புகளும் ஆரம்பமாகி விட்டது. சமுதாயத்தின் மரபுகளும் நாகரீகமும் வேறு விதமாக இருந்தது. இவை அனைத்தையும் எதிர்கொண்டு மவ்லவி சாஹிப் அவர்கள் வெற்றி பெற்றார்கள்.

அஹ்மதிகளின் புத்தகங்களையும் கட்டுரைகளையும் படிக்கக் கூடாது. இவர்களது சொற்பொழிவுகளைக் கேட்கக் கூடாது என்று அங்குள்ள ஆலிம்கள் ஃபத்வா கொடுத்தார்கள். உள்ளூரிலிருந்த அஹ்மதிகளின் எண்ணிக்கை அதிகமான போது அங்குள்ள மக்கள் உள்ளூர் அஹ்மதிகளை புறக்கணிப்பு செய்ய ஆரம்பித்தார்கள். எதுவரையென்றால் பத்திரிகையாளர்கள் கூட எந்தவொரு செய்தியையும் அச்சிட்டு வெளியிட முன்வரவில்லை. எந்த கட்டுரையையும் அச்சிட்டு வெளியிட முன்வரவில்லை. எதிர்ப்பு எந்த அளவுக்கு வலுவானதாக ஆகிவிட்டதென்றால் 3000 நபர்களைக் கொண்ட மக்கள் கூட்டம் மவ்லவி சாஹிப் அவர்களின் வீட்டிற்கு எதிரில் நின்றவாறு அவர்களுக்கு எதிராக முழக்கங்கள் செய்யவும், கூச்சல் போடவும் ஆரம்பித்தார்கள். உள்ளத்தைப் புண்படுத்தும் பல்வேறு முழக்கங்களை செய்தனர். தீய வார்த்தைகளால் ஏசினர்.

இதற்கு பிறகு ஹாஜி மஹ்மூது சாஹிப் அவர்களும் இந்தோனேஷியா வந்தார்கள். மவ்லவிகள் வலுக்கட்டாயமாக அவரிடமிருந்து நான் அஹ்மதிய்யத்தை விட்டு விலகுகிறேன் என்ற அறிக்கையை எழுதி வாங்கினார்கள். அதனை அவர்கள் ஒரு பிரசுரமாகவும் வெளியிட்டார்கள். அதனால் பெரும் கூச்சல் எழுந்தது. அதனால் மவ்லவி சாஹிப் அவர்களுக்கு மேலும் கடுமையான எதிர்ப்பு உருவானது. ஹாஜி மஹ்மூது சாஹிப் அவர்களும் பின்னர் தன்னை சரிசெய்து கொண்டார்கள். ஆலிம்களின் தந்திரத்திலிருந்தும் தன்னைப் பாதுகாத்துக் கொண்டார்கள். அல்லாஹ்வும் அவர்களை காப்பாற்றி விட்டான்.

நமது திட்டங்கள் தோல்வியடைந்து விட்டன என்பது ஆலிம்களுக்கு தெரிந்தவுடன் அவர்கள் அனைவரும் ஒன்றுபட்டு ஹஸ்ரத் மவ்லவி ரஹ்மத் அலி சாஹிப் அவர்களை நாட்டை விட்டும் வெளியேற்றுகின்ற முயற்சிகளை செய்ய ஆரம்பித்தார்கள். இதற்காக அரசாங்கத்திலுள்ள நபர்கள், அரசாங்க பிரதிநிதிகள் ஆகியோரிடம் சென்று முறையிட்டார்கள். ஆனால் ஆட்சியில் இருந்தவர்கள் மார்க்க விஷயங்களில் நாங்கள் தலையிட மாட்டோம் எனறு கூறிவிட்டார்கள்.

1927 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பதானில் உள்ள அஹ்மதியல்லாத ஆலிம்களுடன் விவாதம் நடைபெற்றது. அதில் ஆலிம்களும், மார்க்கப் பெரியார்களும், பத்திரிகை ஆசிரியர்களும், அரசாங்கத்தின் பல்வேறு பொறுப்பில் உள்ளவர்களும் இருந்தனர். ஏற்கனவே விதிக்கப்பட்டது போன்றே இந்த விவாதத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முபல்லிக் மற்றவர்களை விட அறிவில் சிறந்து விளங்கியது நிரூபிக்கப்பட்டது. எதிரிகளுக்கு தோல்வியை தழுவ வேண்டியது வந்தது. இதன் விளைவாக அஹ்மதிய்யத்தின் தப்லீகிற்கான வழி திறந்தது. இந்த காலகட்டத்தில் டாக்கா என்ற இடத்தில் இந்தோனேஷியாவின் மூன்றாவது ஜமாஅத் நிறுவப்பட்டது.

1929 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் மவ்லவி ரஹ்மத் அலி சாஹிப் அவர்கள் காதியானிற்கு திரும்பி வந்தார்கள். 1930 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் மவ்லவி சாஹிப் அவர்கள் மீண்டும் சுமத்ரா செல்ல வேண்டும் என்று கட்டளையிட்டார்கள். ஹஸ்ரத் மவ்லவி சாஹிப் அவர்கள் ஹுஸூர் அவர்களிடம் தனது பணிகளில் ஒத்துழைப்பதற்காக மேலும் ஒரு முபல்லிக்கை தன்னுடன் வைக்குமாறு வேண்டினார்கள். இந்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் மவ்லவி முஹம்மது ஸாதிக் சாஹிப் அவர்களை மவ்லவி சாஹிபுடன் இந்தோனேஷியா செல்லும்படி கட்டளையிட்டார்கள். பிறகு இந்த இருவரும் இந்தோனேஷியா சென்றார்கள். இந்தோனேஷியாவில் ஜமாஅத் வளர வளர எதிர்ப்பும் அதிகமானது. ஆரம்ப காலத்தில் மூன்று

ஜமாஅத்துகளுக்கு சோதனைகளை சந்திக்க வேண்டியது வந்தது. தாத்துவான் ஜமாஅத்திற்கு அங்குள்ள ராஜாவின் மூலமாக சோதனை வந்தது. முறையாக தொழுகையை நிறைவேற்றுவதில் இருந்தும் அஹ்மதிகள் தடுக்கப்பட்டனர். ஜுமுஆ தொழுகைக்கும் தடை விதிக்கப்பட்டது. இந்த எல்லா கடினங்களும் அஹ்மதிகள் மீது போடப்பட்டது.

ரோஸுவாம் ஜமாஅத்திற்கும் அங்குள்ள ராஜாவால் கொடுமை இழைக்கப்பட்டது. வலுக்கட்டாயமாக எல்லாரும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை (நவூதுபில்லாஹ்) பொய்யர் என்றும் தஜ்ஜால் என்றும் கூறவேண்டும் என்றும், அவ்வாறு கூறவில்லையென்றால் அவர்களை அந்த இடத்திலிருந்து வெளியேற்றி விடுவேன் என்றும் ராஜா கூறினார். கொரு அலி சாஹிப் என்ற அஹ்மதி அவர் நிர்வகித்து வந்த பொறுப்பிலிருந்தும் பதவி நீக்கம் செய்யப்பட்டார். அப்துல் ஜலில் சாஹிப் அவர்களையும் அவரது சகோதரரையும் அவர்கள் அஹ்மதிகளாகி விட்ட காரணத்திற்காக அவர்களது கிராமத்தில் இருந்து வெளியேற்றினார்கள். இந்த காலத்தில் மவ்லவி அபூபக்கர் அய்யூப் சாஹிப் அவர்களும் தங்களது படிப்பை முடித்துவிட்டு காதியானிலிருந்து அங்கு வந்து சேர்ந்தார்கள். அவர்கள் கஸாரான் என்ற பகுதியில் தப்லீக் செய்து கொண்டிருந்த போது அவர்கள் தப்லீக் செய்ய தடை விதிக்கப்பட்டது. ஒரு நாள் இரவு 12 மணிக்குப் பிறகு அங்குள்ள உயர் போலீஸ் அதிகாரி அப்பகுதியின் சுல்தானின் கட்டளைக்கேற்ப அவர்களை கைது செய்வதற்காக வந்தார். அவர் அங்குள்ள நபர்களின் பெயர்களை எழுதிக் கொண்டு மவ்லவி சாஹிப் அவர்களிடம், நீங்களும் உங்களது நண்பர்களும் காலை 8.00 மணிக்கு மாவட்ட அதிகாரியின் அலுவலகத்திற்கு வர வேண்டும் என்று கூறி விட்டுச் சென்றார். காலையில் மவ்லவி சாஹிப் அவர்களும் அவர்களது நண்பர்களும் அலுவலகத்திற்கு வந்து சேர்ந்ததும் அவர்கள் மீது கேள்விக்கனைகள் தொடுக்கப்பட்டன. அந்த அதிகாரி இவ்வாறு கேள்வி கேட்டு அவர்களை கைது செய்ய விரும்பினார். ஆனால், அல்லாஹ்வின் அருளால் எல்லா கேள்விகளுக்கும் மிகுந்த தொலைநோக்குப் பார்வையுடனும், நுட்பமான ஞானத்துடன் மவ்லவி சாஹிப் பதில் கூறி வந்தார்கள். இதனால் மாவட்ட அதிகாரி அவர்களுக்கு சிறந்த தாக்கம் ஏற்பட்டது. இதற்கு பிறகு தனது அதிகாரத்தைக் காட்டும் அந்த நிலையை மாற்றிக் கொண்டு மிகுந்த ஆர்வத்துடனும் முகமலர்ச்சியுடனும் ஏறக்குறைய அரை மணி நேரம் வரை அவர் அஹ்மதிய்யத்தைப் பற்றி பலவற்றையும் கேட்டு தெரிந்து கொண்டார். பிறகு மிகுந்த கண்ணியத்துடன் அங்கு வந்த எல்லாரையும் வழி அனுப்பி வைத்தார்.

இந்தோனேஷியாவின் ஒரு கட்டுரை ஆசிரியர் ஜமாஅத் செய்த தொண்டுகள் பற்றி எழுதியிருந்ததை நான் கூறியிருந்தேன். இந்தோனேஷியாவை உருவாக்குவதில் ஜமாஅத்திற்கு இருந்த பங்கு தொடர்பாகவும் சுருக்கமாக கூறி விடுகிறேன்.

அங்கு ஜமாஅத் எவ்வாறு தோன்றியது என்பதைப் பற்றியும் என்னென்ன துன்பங்கள் ஆரம்ப காலத்தில் இருந்தன என்பதைப் பற்றியும் நான் ஏற்கனவே கூறி விட்டேன். எப்போதும் இங்கு எதிர்ப்பு இருந்தே வந்தது. ஜமாஅத் செய்த தொண்டுகள் பற்றி கூறுகின்றேன்.

இந்தோனேஷியாவின் விடுதலைக்காக இந்தியாவிலிருந்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் குரல் கொடுத்தார்கள். மற்ற முஸ்லிம்களும் இந்தோனேஷியாவின் விடுதலைக்கான முயற்சியில் இந்தோனேஷியாவிலுள்ள முஸ்லிம்களுக்கு முழுமையாக ஆதரவு தர வேண்டும் என்று கூறினார்கள். இதனை 1946 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 16 ஆம் தேதி நிகழ்த்திய குத்பா பேருரையில் அன்னார் குறிப்பிட்டுக் கூறியிருந்தார்கள். ஹுஸூர் அவர்களின் இந்த வேண்டுகோளுக்கு பிறகு காதியானிலுள்ள தலைமையக செய்தி நிறுவனம் மூலமாகவும் உலகிலுள்ள அஹ்மதிய்யத்தின் அனைத்து பிரச்சார நிலையங்கள் மூலமாகவும் இந்தோனேஷியாவின் விடுதலைக்காக வலுவான குரல் எழுப்பப்பட வேண்டும் என்று கூறப்பட்டது. எதுவரை என்றால் இறுதியில் இந்தோனேஷியாவிற்கு விடுதலை கிடைத்தது. ஜப்பானிய அரசாங்கம் முடிவுக்கு வந்தவுடன் டாக்டர் சுகர்னோ அவர்கள் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17 ஆம் தேதி இந்தோனேஷியா விடுதலை பெற்று விட்டதாக அறிவிப்பு செய்தார். டச்சு அரசிற்கு எதிராக முழு நாட்டிலும் போர் நடந்தது. இந்த சந்தர்ப்பத்தில் அஹ்மதிய்யத்தின் முபல்லிக்குகளும் மற்றவர்களும் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் கட்டளைக்கேற்ப விடுதலை இயக்கத்தில் முழுமையாக

பங்கு பெற்றார்கள். அஹ்மதிய்யத்தின் முபல்லிக்குகளும் ஜமாஅத்தின் உயர் பொறுப்புகளில் இருந்த சகோதரர்களும் குடியரசுடன் இணைந்து செயல்பட்டார்கள். ஸய்யது ஷா முஹம்மது சாஹிப் அவர்கள் ஜகார்த்தாவிற்கு வந்து சேர்ந்ததும் டாக்டர் சுகர்னோவை சந்தித்தார்கள். நான் இந்த விடுதலை இயக்கத்தில் பங்கேற்று இந்த நாட்டிற்கு தொண்டு செய்ய விரும்புகின்றான் என்று அவரிடம் கூறினார்கள். ஜனாதிபதி சுகர்னோஅவர்கள் வேறு பல பணிகள் நீங்களாக அன்னாரிடம் ரேடியோவில் உருது மொழியில் செய்திகளை ஒலிபரப்பும் பணியை ஒப்படைத்தார்கள். அவர்களை தவிர மவ்லவி அப்துல் வாஹிது சாஹிப் அவர்களும் ஏறக்குறைய இரண்டு அல்லது மூன்று மாதங்கள் வரை ரேடியோ ஒலிபரப்புப் பணியை செய்து வந்தார்கள். ஸெய்யது ஷா முஹம்மது சாஹிப் மிகுந்த ஆர்வத்துடனும் துடிப்புடனும் இந்த விடுதலை இயக்கத்தில் பங்கேற்றார்கள். எதுவரை என்றால் அவரது ஆர்வத்தைப் பற்றி இந்தோனேஷியாவின் முன்னாள் உள்துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட போது ஸெய்யது ஷா முஹம்மது சாஹிப் அவர்கள் எங்கள் சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு நபராகத்தான் நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்றோம். இவர் இந்தியர் அல்ல என்று கூறியுள்ளார்.

ஸெய்யது ஷா முஹம்மது சாஹிப் அவர்கள் இந்தோனேஷியாவின் விடுதலைக்காக செய்த பணிகளை பாராட்டியவாறு 1957 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 3 ஆம் தேதி அரசாங்கத்தின் தரப்பிலிருந்தும் ஒரு பாராட்டுக் கடிதம் எழுதப்பட்டது. தகவல் தொடர்பு அமைச்சகம் தரப்பிலிருந்தும் இந்த பாராட்டுக் கடிதம் அவர்களுக்கு வந்தது. அதில் நாங்கள் தற்போது ஜகார்தாவிலிருந்து வருகின்ற அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தலைவராக இருக்கின்ற ஸெய்யது முஹம்மது ஷா சாஹிபின இந்த தொண்டுகளையும் பணிகளையும் மிகுந்த மரியாதையுடனும் கண்ணியத்துடனும் ஏற்றுக் கூறுகின்றோம். இந்தோனேஷிய சமுதாயத்திற்காகவும் இந்தோனேஷிய குடியரசிற்காகவும் அக்காலத்தில் இந்தோனேஷியாவின் விடுதலைக்காகவும் அவர்கள் இந்த அரிய பணிகளை செய்துள்ளார்கள். தகவல் தொடர்பு அமைச்சகத்தின் தலைமையில் இருந்த விளம்பரத் துறையின் ஒரு உறுப்பினர் என்ற நிலையில் அவர் தனது மூளையின் ஆற்றலாலும் ஏனைய திறமைகள் மூலமாகவும் முழுமையான உறுதியுடன் ஒட்டுமொத்த உலக சமுதாயங்களின் பொதுவான கருத்தை ஒரே திசையின் பக்கம் ஈர்த்துக் கொண்டு வந்தார். அதன் மூலம் இந்தோனேஷியாவில் குடியரசு அமைவதற்காக அவர் செய்த முயற்சிகள் எல்லாமே உண்மையான முயற்சிகளாக இருந்தன. எந்த நாட்களில் டச்சு அரசாங்கம் அரசாங்க தலைநகரமான ஜகார்தாவின் மீது தாக்குதல் நடத்தி அதை கைப்பற்றிக் கொண்டதோ அந்த காலத்திலும் கூட அவர் எங்களது முயற்சியில் முழுமையாக எங்களுக்கு உதவி செய்து வந்தார்.

**பிறகு அந்தக் கடிதத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது.**

ஐக்கிய நாட்டு சபை (U.N.O) –யின் கருத்திற்கேற்ப ஜகார்தாவிலிருந்து டச்சு ராணுவம் திரும்பிச் சென்ற பிறகு ஜகார்தாவில் புதிய அரசாங்கம் தேர்ந்தெடுக்கப்பட்ட சமயத்தில் கூட இந்தோனேஷிய குடியரசின் முழுமையாக சீரமைப்பிற்காக உருவாக்கப்பட்ட கமிட்டியிலும் ஜனாப் ஸெய்யத் ஷா முஹம்மது சாஹிப் அவர்கள் உறுப்பினராக பணியாற்றியுள்ளார்கள். பிறகு இதே பாராட்டுக் கடிதத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. குடியரசுத் தலைவர் சுகர்னோ அவர்கள் டச்சு அரசாங்கத்தால் சிறை வைக்கப்பட்ட பிறகு ஜகார்தாவிற்கு வந்த சமயத்தில் அவரை வரவேற்பதற்காக நிறுவப்பட்ட கமிட்டியிலும் ஸெய்யத் ஷா முஹம்மது சாஹிப் அவர்கள் உறுப்பினராக இருந்தார்கள்.

பிறகு அந்த பாராட்டுக் கடிதத்தில் இவ்வாறு எழுதப்பட்டிருக்கின்றது. டச்சு அராசங்கத்திடமிருந்து அதன் உரிமைகளை தாம் பெற்றுக் கொண்டு குடியரசுத் தலைவர் சுகர்னோ ஜகார்தாவிற்கு வந்த போது அவர்களோடு வந்தவர்களில் ஸெய்யது ஷா முஹம்மது சாஹிப் அவர்களும் இருந்தார்கள். பிறகு அரசாங்க அலுவலகங்கள் ஜகார்தாவிற்கு மாற்றப்பட்ட போது ஸெய்யது சாஹிப் அவர்கள் ரேடியோவின் ஒலிபரப்புத் துறையுடன் இணைந்து உருது மொழி நிகழ்ச்சிகளில் பங்கேற்று மிகவும் சிறந்த முறையில் தமது கடமைகளை நிறைவேற்றி வந்தார். பிறகு இந்தோனேஷியாவின் அஹ்மதிய்யா மிஷன் ஹவுஸின் இன்சார்ஜ் ஆகவும் இருந்து தனது பணிகளை அவர்கள் தொடர்ந்து செய்து வந்தார்கள்.

இந்தோனேஷிய குடியரசின் முதல் தலைவராக இருந்தவர் திருக்குர்ஆனை அஹ்மதிகளிடமிருந்து தான் கற்றுக் கொண்டார் என்பதை நான் கூறியிருந்தேன். அவர் தனது நூல் ஒன்றில் இவ்வாறு எழுதுகின்றார்.

அஹ்மதிய்யத்தின் சில விஷயங்களை நான் ஏற்றுக் கொள்ளாமல் இருந்தாலும், அவற்றை நான் மறுத்தாலும் அஹ்மதிகளின் போதனைகள் மற்றும் அதனால் கிடைக்கின்ற பலன்கள் ஆகியவற்றிற்காக நான் நன்றி கூறுபவனாக இருக்கின்றேன். அந்த போதனைகள் எழுத்துக்களின் வடிவத்தில் எனக்கு கிடைத்தது. அவை அறிவு மற்றும் புதிய எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றதாகவும் விரிவான அறிவை இன்னும் அதிகப்படுத்தக் கூடியவையாகவும் உள்ளன.

நாட்டிற்காக நாவளவிலும் செயலளவிலும் மட்டும் அஹ்மதிகள் தொண்டு செய்து விட்டு அல்லது சிறந்த ஆலோசனைகளைக் கூறி விட்டு மட்டும் இருந்துவிடவில்லை. மாறாக 1946 ஆம் ஆண்டு விடுதலைப் போராட்டம் நடைபெற்ற சமயத்தில் சில அஹ்மதி சகோதரர்கள் தங்கள் வாழ்வை அர்ப்பணித்தவாறு நாட்டிற்காக ஷஹீதாகி இருக்கின்றார்கள். அவர்களில் இந்தோனேஷியா ஜமாஅத்தின் தலைவராக இருந்த ராடின் முஹையுத்தீன் சாஹிப் அவர்களும் ஒருவர் ஆவார்கள். இந்தோனேஷியாவின் முதல் விடுதலை நாளை விடுதலை விழாவாக கொண்டாடுவதற்காக நியமிக்கப்பட்ட கமிட்டியின் உறுப்பினர் என்ற நிலையில் அந்த விடுதலை விழாவிற்கான பணிகளில் அவர் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயத்தில் டச்சு ராணுவப் படையினர் அவர்களை கடத்திக்கொண்டு சென்றார்கள். பிறகு அன்னாரை அவர்கள் ஷஹீதாக்கி விட்டார்கள். எனவே நாட்டின் விடுதலையில் அஹ்மதிய்யத்தின் இரத்தத்திற்கும் பங்கு இருக்கின்றது. நாட்டிற்காக இந்தோனேஷியாவின் அஹ்மதிகள் செய்த தியாகங்களையும் தொண்டுகளையும் நான் கூறி விட்டேன்.

ஆனால், ஆலிம்களும் தீவிரவாதத்தை விரும்பும் பிரிவுகளும் தங்களது கொடுமையான செயல்களை ஜமாஅத்திற்கு எதிராக தொடர்ந்து செய்திருக்கின்றார்கள். இந்தோனேஷியாவில் அஹ்மதிய்யத்திற்காக ஷஹீதான சில பழைய ஷஹீதுகளைப் பற்றி இப்போது நான் கூறுவேன்.

1946 ஆம் ஆண்டில் இந்த ஆறு அஹ்மதிகள் ஷஹீதாக்கப்பட்டிருக்கின்றார்கள்.

1) ஜெய்தாது சாஹிப் 2) சூரா சாஹிப் 3) ஸஹரி சாஹிப் 4) ஹாஜி ஹஸன் சாஹிப் 5) ராடின் சாலி சாஹிப் 6) டெஹ்லன் சாஹிப்.

இந்த ஆறு சகோதரர்களும் மேற்கு சிங்கப்பூர்னாவில் இருக்கின்ற ஜாவா என்ற கிராமத்தில் ஷஹாதத்தின் உயர் தகுதியைப் பெற்றார்கள். வஹாபி இயக்கத்தைச் சேர்ந்த தாருல் இஸ்லாம் என்ற ஒரு பிரிவினர் கற்களாலும் தடியாலும் இந்த அஹ்மதிகள் மீது கொடூரமான தாக்குதலை நடத்தினார்கள். பிறகு அவர்களது வீட்டில் வைத்து அவர்களது குடும்பத்தினர் முன்பாகவே இரக்கமில்லாமல் அவர்களை அடித்து கிராமத்திலிருந்து அவர்களை இழுத்து வெளியே கொண்டு வந்தார்கள். பிறகு அவர்களை அடித்து ஷஹீதாக்கினார்கள்.

தாருல் இஸ்லாம் பிரிவினர் தாக்குதல் நடத்துவதற்கு முன்னர் வலுக்கட்டாயமாக அவர்களை அஹ்மதிய்யத்தை விட்டு விலகும்படி கூறினார்கள். ஆனால், இவர்கள் அனைவரும் அஹ்மதிய்யத்தில் உறுதியாக நிலைத்து நின்றார்கள். இரண்டு வருடங்கள் கழிந்ததும் 1949 ஆம் ஆண்டில் இந்த அஹ்மதிகள் ஷஹாதத்தின் பானத்தை அருந்தினார்கள்.

1) ஷானி சாஹிப் 2) ஓமா சாஹிப் 3) தய்யான் சாஹிப் 4) ஸாருமி சாஹிப் 5) சோமா சாஹிப் 6) ஹம்லீ சாஹிப் 7) ஸல்மான் சாஹிப் 8) உஸ்மான் சாஹிப் 9) ஏடோட் சாஹிபா 10) ஆனே சாஹிபா இவர்களுடன் இரண்டு பெண்களுக்கும் ஷஹாதத்தின் நற்பேறு கிடைத்துள்ளது.

இந்த அஹ்மதிகள் மேற்கு சிங்கப்பூர்னாவில் உள்ள ஜாவா என்ற கிராமத்தில் சங்கயான் லேபன் என்ற இடத்தில் ஷஹாதத்தின் உயர் தகுதியை அடைந்தார்கள். இவர்களையும் வஹ்ஹாபி இயக்கத்தைச் சார்ந்த தாருல் இஸ்லாம் என்ற பிரிவினர் தடியாலும், கற்களாலும், செங்கற்களாலும் அடித்து ஷஹீதாக்கினார்கள். இவர்களையும் கிராமத்திலிருந்து இழுத்து வெளியில் கொண்டு வந்தார்கள். அங்கு கொடூரமான

வழிமுறையை மேற்கொண்டவாறு அவர்களை அடித்து அடித்து ஷஹீதாக்கினார்கள். இவர்களிடமும் அஹ்மதியத்திலிருந்து தவ்பா செய்யும்படி வலுக்கட்டாயமாக கூறினார்கள். ஆனால் அதனை அனைவரும் மறுத்து விட்டார்கள். தங்களது கொள்கையில் உறுதியாக நிலைத்து நின்றார்கள்.

பிறகு அஹ்மதிய்யா ஜமாஅத்தை எதிரிகள் கடுமையாக எதிர்த்த இன்னொரு காலகட்டம் 2001 ஆம் ஆண்டில் ஆரம்பமானது. பாபூக் ஹஸன் சாஹிப் அவர்களை 2001 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 22 ஆம் தேதி எதிரிகள் ஷஹீதாக்கினார்கள். அப்போது அவருக்கு வயது 55 ஆகும். ஏறக்குறைய அஹ்மதிய்யத்தின் எதிரிகளாக 100 நபர்கள் மேற்கத்திய லம்போவில் உள்ள ஒரு கிராமமான லலுவாவின் மீது தாக்குதல் நடத்தினார்கள். அப்போது எதிரிகள் ஜமாஅத்தின் பள்ளிவாசலை தகர்த்துவிட விரும்பினார்கள். பாபூக் ஹஸன் சாஹிப் அவர்கள் மற்ற அஹ்மதி சகோதரர்களுடன் எதிரிகள் நடத்திய தாக்குதலை சந்தித்தவாறு நிமிர்ந்த நெஞ்சுடன் நின்றார்கள். அதனால் கடுமையாக அவர்கள் காயமுற்றார்கள். மயக்கமடைந்து கீழே விழுந்தார்கள். உடனடியாக அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். ஆனால் அதிகமாக இரத்தம் வெளியேறி விட்டதன் காரணமாக செல்லும் வழியிலேயே அவர் ஷஹாதத்தின் பானத்தை அருந்தினார். அப்போது அவருக்கு வயது 55.

2002 ஆம் ஆண்டில் அரசாங்க பணியில் இருந்தவர்களும் இந்த எதிரிகளோடு சேர்ந்து கொண்டார்கள். அதனால் இந்த கொடியவர்கள் பல்வேறு அநீதிகளை அஹ்மதிகளுக்கு இழைத்து வந்தார்கள். மவுன்ஸோர் என்ற பகுதியில் எதிரிகள் அஹ்மதிகளின் வீட்டின் மீது கல் எறிந்தார்கள். 42 அஹ்மதி வீடுகளிலும் இரண்டு அஹ்மதி பள்ளிவாசல்களிலும் அங்கிருநத கண்ணாடி போன்றவற்றை உடைத்தார்கள். உள்ளூர் அரசாங்கம் மவுன்ஸோர் ஜமாஅத்தின் மீது செய்யப்படும் கொடுமைகளை தடுத்து நிறுத்துவதற்கான கட்டளையை பிறப்பித்தது. மேலும் அஹ்மதி சகோதரர்கள் பள்ளிவாசலை பயன்படுத்தக்கூடாது என்று கட்டளை பிறப்பித்தது.

2005 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 15 ஆம் தேதி இந்தோனேஷிய ஜமாஅத்தின் தலைமையக பள்ளிவாசல் மீது எதிரிகளின் ஒரு பிரிவினர் தாக்குதல் நடத்தினார்கள். ஜமாஅத் கட்டடங்கள் மீதும் பொருள்கள் மீதும் தாக்குதல் நடத்தி அவற்றை சேதப்படுத்தினர். போலீஸ் அங்கு நின்று வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தது. சில கட்டடங்கள் மீது நெருப்பு மூட்டப்பட்டது. எல்லா சென்டர்களும், பள்ளிவாசல்களும், மிஷன் ஹவுஸ்களும், கிளை அமைப்புகளின் அலுவலகங்களும் ஏனைய கட்டடங்களும் அரசாங்கத்தால் சீல் வைக்கப்பட்டது. இவ்வகையில் அரசாங்கம் எதிரிகளோடு சேர்ந்து கொண்டது.

2005 ஆம் ஆண்டு செம்டம்பர் மாதம் 19 ஆம் தேதி 500 எதிரிகள் சஞ்சாயூ மண்டலத்தில் உள்ள 5 ஜமாஅத்துகள் மீது தாக்குதல் நடத்தி இந்த 5 ஜமாஅத்துகளின் பள்ளிவாசல்களுக்கும் பெரும் இழப்பை ஏற்படுத்தினார்கள். கதவுகளும் ஜன்னல்களும் உடைக்கப்பட்டன. மிஷன் ஹவுஸ்களுக்கும் சேதம் ஏற்பட்டது. பொருள்களும் கொள்ளையடிக்கப்பட்டன. பல பொருட்கள் எரிக்கப்பட்டன. அவை உடைக்கப்பட்டன. சில வீடுகள் எரிக்கப்பட்டன. பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டது. சில இடங்களில் அஹ்மதிய்யா மத்ரஸாக்களுக்கும் இழப்பு ஏற்படுத்தப்பட்டது. இந்த ஜமாஅத்துகளில் அஹ்மதி சகோதரர்களின் கார், மோட்டார் சைக்கிள் போன்றவையும் எரிக்கப்பட்டன.

2005 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 19 ஆம் தேதி இரவு 9 மணிக்கு 100 எதிரிகள் ஒன்றுசேர்ந்து கேதாபான் ஜமாஅத்தின் மீது தாக்குதல் நடத்தினார்கள். மூன்று அஹ்மதி வீடுகளுக்கு சேதத்தை ஏற்படுத்தினார்கள். இரண்டு அஹ்மதி சகோதரர்கள் காயமுற்றார்கள். இந்த ஜமாஅத்தைச் சேர்ந்த சகோதரர்கள் சம்பவம் நடப்பதற்கு முன்னரே பேன்கோ மற்றும் ஷிலாங் ஆகிய இடங்களில் தங்கியிருந்தார்கள். அந்த இடங்களில்தான் 2002 ஆம் ஆண்டில் எதிரிகள் தாக்குதல் நடத்தி அவர்களை பள்ளிவாசல்களிலிருந்தும் அவர்களது வீடுகளிலிருந்தும் வெளியேற்றி இருந்தார்கள். மேலும் அவர்களது வீடுகளையும் பள்ளிவாசல்களையும் எதிரிகள் எரித்தும் விட்டார்கள். அதனால் அவர்கள் அங்கிருந்து ஹிஜ்ரத் செய்து கேத்தாபான் என்ற இடத்திற்கு வந்தார்கள். பிறகு 2005 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் மீண்டும் இங்கு எதிரிகள் தாக்கியுள்ளனர். எல்லா இடங்களிலும் இவர்கள் இந்த துன்பங்களை சகித்துக் கொண்டு தங்களது ஈமானில் உறுதியாக நிலைத்து நின்றார்கள்.

2006 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் மேற்கத்திய நம்போக் தீவிலுள்ள சித்தாபான் ஜமாஅத்தின் மீது தாக்குதல் நடந்தது. 23 வீடுகளுக்கு இழப்பு ஏற்பட்டது. 6 வீடுகள் எரிக்கப்பட்டன. ஜமாஅத் சகோதரர்களின் கடைகளுக்கும் சேதம் ஏற்பட்டது. பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டன. இவர்களது செல்வங்களும் விலங்குகளும் கொள்ளையடிக்கப்பட்டது. 100 ஜமாஅத் சகோதரர்கள் தங்கள் வீடுகளை இழந்தார்கள். பிறகு இந்த பகுதியை விட்டு விட்டு செல்ல வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டது.

2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ம் தேதி பங்குவான் என்ற இடத்தில் உள்ளூர் மவ்லவிகளின் தலைமையில் மத்ரஸா மாணவர்கள் நமது பள்ளிவாசலை உடைத்து அதை விழும்படி செய்து விட்டார்கள். 26 அஹ்மதிகளுக்கு இந்தப் பகுதியை விட்டு விட்டு வேறு இடத்திற்கு மாறிச் செல்ல வேண்டியது வந்தது.

2007 ஆம் ஆண்டு மஸ்ஜிது மஹ்மூது மீது சிங்கப்பூர்னா என்ற இடத்தில் மூன்றாவது தாக்குதல் நடந்தது. பள்ளிவாசல்களின் எல்லா கண்ணாடிகளும் உடைக்கப்பட்டன. கூரைக்கும் சேதத்தை ஏற்படுத்தினார்கள். அலுவலக பொருள்களும் பர்னிச்சர்களும் உடைக்கப்பட்டன.

2007 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18 ம் தேதி 500 பேர்களை விடவும் அதிகமான எண்ணிக்கையில் இருந்த எதிரிகள் ஒரு ஜமாஅத்தின் மீது தாக்குதல் நடத்தினார்கள். எதிரிகள் டிஃபன்ஸ் ஃபிரான்ட் மற்றும் மஜ்லிஸே முஜாஹிதீனுடன் தொடர்புடையவர்களாக இருந்தார்கள். ஜமாஅத்தின் இரண்டு பள்ளிவாசல்களுக்கு இழப்பை ஏற்படுத்தினார்கள். அங்குள்ள பொருள்களை உடைத்தார்கள். 12 திருக்குர்ஆன் பிரதிகளை எரித்தார்கள். 9 பள்ளிவாசல்களுக்கு போலீஸ் சீல் வைத்தது. வீடுகளுக்கும் இழப்பை ஏற்படுத்தினார்கள். அவற்றை உடைத்து நொறுக்கினார்கள். 3 நபர்கள் காயமுற்றார்கள். இந்த காரணங்களால் மக்கள் வலுக்கட்டாயமாக இந்த இடங்களிலிருந்து வெளியேற வேண்டியது வந்தது. இன்று வரை பல்வேறு இடங்களில் இதே போன்ற நிலைமைதான் நீடிக்கின்றது. கடந்த காலங்களில் இப்படிப்பட்ட நிலைமைகளை இந்தோனேஷியாவின் ஜமாஅத் சந்தித்து வந்திருக்கின்றது. ஆனால், அல்லாஹ்வின் அருளால் தங்களது ஈமானின் வலுவான நிலையைக் காட்டியவாறு அந்த ஈமானில் அவர்கள் நிலைத்து நிற்கின்றார்கள். ஒவ்வொரு தீங்கையும் தைரியத்துடனும் பொறுமையுடனும் அவர்கள் எதிர்த்து வருகின்றனர்.

இப்போது நடந்துள்ள புதிய ஷுஹதாக்களும் தொடர்ந்து நடந்து வரும் அநீதியின் விளைவாகவே நடந்திருக்கின்றது. இந்த கொடுமையான செயல்கள் பல வருடங்களுக்கு முன்னதாகவே ஆரம்பமாகி விட்டது. ஆனால், நான் ஏற்கனவே கூறியது போன்று உள்ளூர் பத்திரிகைத்துறை இதுபற்றி பகிரங்கமாக எழுதியிருக்கின்றது. அவர்களுக்கு அதிகமான தைரியம் வந்து விட்டது.

இப்போது ஷஹீதானவர்களின் நற்செயல்களை நான் எடுத்துக் கூறுவேன். முதலாவது, **ஷஹீது தூபா கோஸ் சாந்திரா முபாரக் சாஹிப்** ஆவார்கள். இவர் பிறப்பால் அஹ்மதியாவார். இவருக்கு வயது 34. ஜமாஅத்தின் தலைமையகத்தில் தங்கி வந்தார். இவரது மனைவி தற்போது 5 மாத கர்ப்பிணியாக இருக்கின்றார்கள். திருமணமாகி 8 வருடங்கள் கழிந்த பிறகு இப்போது தான் முதலாவது குழந்தை பிறக்கப் போகின்றது. இவரது குழந்தையை வக்ஃபே நவ் திட்டத்தில் இணைத்துவிட வேண்டும் என்பது இவரது ஆசையாக இருந்தது. இவர் வக்ஃபே நவ்விற்கான படிவங்களை நிரப்பியிருந்தார். ஆனால் அதை தலைமையகத்திற்கு அனுப்பி வைக்கவில்லை. அந்த தாள்களும் வந்து சேரும். குழந்தையும் வக்ஃபே நவ் திட்டத்தில் இணைந்து விடும் இன்ஷா அல்லாஹ். சாந்திரா சாஹிப் ஜமாஅத்தின் விவசாயத்துறை செயலராக இருந்து வந்தார். தலைமையகத்தில் உள்ள ஜமாஅத் நிலத்திற்கான பொறுப்புகளும் இவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. மிகவும் தூய உள்ளம் கொண்டவராகவும் ஜமாஅத்திற்காக தம்மை அர்ப்பணிப்பவராகவும் அவர் இருந்தார். முறையாக சந்தாக்களை செலுத்தி வந்தார். இவரது முழு குடும்பமும் தூய உள்ளம் கொண்ட அஹ்மதிகள் இருக்கின்ற குடும்பமாக இருக்கின்றது. இந்த சம்பவம் நடப்பதற்கு ஒரு நாள் முன்னதாக இவரது மனைவி இவரிடம் இப்போது தாக்குதல் நடந்துள்ள அந்த ஜமாஅத் இருக்கும் சிக்கியுசிக் என்ற இடத்திற்கு நீங்கள் செல்ல வேண்டாம். நான் 5 மாத கர்ப்பிணியாக இருக்கின்றேன். என்னைப் பற்றி உங்களுக்கு இருக்க வேண்டும் என்று கூறினார். நீங்கள் என்னைப் பற்றி சிந்திப்பீர்களா? அல்லது ஜமாஅத் தொடர்பாக சிந்திப்பீர்களா? என்று கேட்டார். அதற்கு அவர் நான் இப்போது ஜமாஅத்திற்கு

முன்னுரிமை வழங்குகின்றேன். டிரைவர் என்ற நிலையில் மட்டுமே நான் அங்கு செல்கின்றேன். டியூட்டி கொடுக்கும் குத்தாம்களை அங்கு கொண்டு போய் சேர்க்க வேண்டும் என்று கூறினார். இவர் அங்கு போய் சேர்ந்ததும் தாக்குதல் நடந்தது. மர்ஹூம் தனது பணியின் கீழ் இருப்பவர்களிடம் நல்ல முறையில் பரிமாறக்கூடியவராக இருந்தார். ஒவ்வொரு தொழுகையையும் பள்ளிவாசலில் ஜமாஅத்தாக அவர் தொழுது வந்தார். சரியான நேரத்தில் தொழ வேண்டும் என்று தமது மனைவிக்கும் இவர் போதித்து வந்தார். இவர் வீரமிக்க ஒரு காதிம் ஆகத் திகழ்ந்தார்.

துபாகோஸ் சாந்த்ரா முபாரக் சாஹிப் மிஷன் ஹவுஸிற்கு உள்ளே இருந்தார். எல்லா குத்தாம்களை விடவும் முன்னதாக அவர் அமர்ந்திருந்தார். எதிரிகள் இவரது உடலில் கத்தியால் பலமுறை தாக்கினார்கள். பிறகு மிக கொடூரமாக இவரை அடித்தார்கள். பிறகு இவரை தொங்க விட்டு அடித்தார்கள். பிறகு இவரை கீழே இறக்கி இவரது சடலத்தையும் கற்களாலும் கம்புகளாலும் அடித்து அதன் உருவத்தையே சிதைத்து விட்டார்கள். முதலில் இவரது சடலத்தை அடையாளம் காண முடியமல் இருந்தது. பிறகு சாந்திரா சாஹிபின் சகோதரர் அங்கு வந்து உடலிலிருந்த ஒரு அடையாளத்தை வைத்து அது தனது சகோதரர் சாந்திரா சாஹிபின் சடலம்தான் என்பதை தெரிந்து கொண்டார்.

இரண்டாவது ஷஹீது அஹ்மது மஸோனா சாஹிப் ஆவார். இவர் கிழக்கு ஜகார்த்தாவை சார்ந்தவராவார். இவருக்கு வயது 38. 2002 ஆம் ஆண்டு பைஅத் செய்வதற்கான நற்பாக்கியம் கிடைத்தது. மனைவியை தவிர இவருக்கு நான்கு குழந்தைகள் இருக்கின்றார்கள். 2000 ஆம் ஆண்டு அஹ்மதிய்யத்தைப் பற்றிய அறிமுகம் இவருக்கு கிடைத்தது. ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இந்தோனேஷியா சென்ற சமயத்தில் இந்த அறிமுகம் கிடைத்தது. ஒரு அஹ்மதி சகோதரர் இவர் படிப்பதற்காக நூல்களைக் கொடுத்தார். இவர் மிகவும் ஆர்வத்துடன் அவற்றை படித்தார். இரண்டு வருடங்கள் ஆராய்ச்சி செய்த பிறகு பைஅத் செய்து விட வேண்டும் என்று முடிவெடுத்தார். பிறகு இவரது மனைவியும் பைஅத் செய்து விட்டார். மிக விரைவாக அஹ்மதிய்யத்தின் உண்மை மீது வலுவாக அவர் நிலைத்து நின்றார். அஹ்மதிய்யத்தில் நுழைவதற்கு முன்னர் அவர் தனது பெற்றோர்களிடம் நல்ல விதமாக பரிமாறமாட்டார். ஆனால் அவர் அஹ்மதிய்யத்தில் இணைந்ததும் அவரது பெற்றோர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். அவரது ஒழுக்கம் நல்லதாக ஆகிவிட்டதைப் பார்த்து மகிழ்ந்தார்கள். அவர் பெற்றோர்களை கண்ணியப்படுத்தினார். அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொண்டார். ஆன்மீகத்திலும் மிகவும் முன்னேறிச் சென்றார். நான் தப்லீக் செய்யும் போது விண்ணின் உதவியை உணர்கின்றேன்; இறைவன் எனது தேவைகளை பூர்த்தி செய்கின்றான் என்று அவர் கூறி வந்தார். ஒருநாள் அவருக்கு பணத்தேவை ஏற்பட்டது. வீட்டு வாடகையை செலுத்த வேண்டியதிருந்தது. அன்றாட தேவைகளை நிறைவேற்ற வேண்டியிருந்தது. அவர் அதிகமாக துஆ செய்தார். சிறிது நேரம் கழிந்ததும் ஒரு நபர் வந்தார். அவரிடமிருந்து வேலை வாங்குவதற்காக அவரை அழைத்துச் சென்றார். அதன் மூலம் அவருக்கு கிடைத்த தொகையின் மூலமாக அவர் அந்த தேவையை நிறைவேற்றினார். தமது வாழ்க்கையில் மற்றவர்களுக்கு பயனளிக்கும் வகையில் நாம் நடந்து கொள்ள வேண்டும் என்று அவர் மிகவும் விரும்பினார். இவர் ஒரு கனவு கண்டார். அவர் கனவில், முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களையும், இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களையும், மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களையும், நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களையும் சந்தித்தார். பல பைஅத்துகள் இவர் மூலம் நடந்தது. மிகவும் வீரமிக்கவராக இருந்தார். தப்லீகிற்கான ஆர்வம் மிகவும் அதிகமாக இருந்தது. மிகவும் பின்னால் வந்த பிறகும் கூட அவர் எல்லாரையும் விட முன்னேறிச் சென்று விட்டார். தாக்குதல் நடந்த சமயத்தில் மஸோனா சாஹிப் மிஷன் ஹவுஸிற்குள்ளே இருந்தார்கள். எதிரிகள் கத்திகளாலும் கம்புகளாலும் மிகவும் கொடூரமான முறையில் இவரை தாக்கினார்கள். இவரது சடலத்தை வெளியே கொண்டு வந்து போலீஸ் மற்றும் பொதுமக்கள் முன்னால் வைத்து எதிரிகள் ஒருவர் பின் ஒருவராக வந்து அந்த சடலத்தை அடித்துக் கொண்டே இருந்தார்கள். போலீஸ் இவற்றையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. இவரது சடலமும் அடையாளம் தெரியாமல் ஆகிவிட்டது. இவரை ஒரு காதிம் அடையாளம் காண்பதில் தவறு ஏற்பட்டு அவர் வேறு ஒரு நபரின் பெயரைக் குறிப்பிட்டு அவர் ஷஹீதாகி விட்டதாக கூறியிருந்தார். இறுதியில் இவர் தான் அஹ்மது மஸோனா சாஹிப் என்பது தெரிய வந்தது.

மூன்றாவது ஷஹீது ரோனி பெஸானி சாஹிப் ஆவார்கள். ஷஹீதாகும் போது இவருக்கு வயது 35. 2008 ஆம் ஆண்டு ஜனவர் மாதம் 11 ஆம் தேதி இவர் பைஅத் செய்தார். பைஅத் செய்து இப்போது இரண்டு வருடங்கள்தான் ஆகின்றது. கிழக்கு ஜகார்த்தாவில் வசித்து வந்தார். மனைவியைத் தவிர இரண்டு பெண் குழந்தைகள் இருக்கின்றார்கள். ஒரு குழந்தைக்கு 5 வயதும் இன்னொரு குழந்தைக்கு 6 வயதும் ஆகும் போது அவர்களை விட்டு பிரிந்து சென்று விட்டார். பைஅத் செய்வதற்கு முன்னர் கொள்ளைக்காரராகவும் சூதாட்டத்தில் ஈடுபடுபவராகவும் அவர் இருந்தார். ஒரு இரவில் இவர் ஒரு கனவு கண்டார். அதில் அவர் ஒரு பெரியவரை சந்தித்தார். அந்த பெரியவர் தலைப்பாகை அணிந்திருந்தார். ஒருநாள் மஸோனா சாஹிப் அவர்களின் வீட்டிற்கு வந்த சமயத்தில் சுவற்றில் மாட்டப்பட்டிருந்த ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் புகைப்படத்தைப் பார்த்து நான் கனவில் கண்ட நபர் இவர்தான் என்று கூறினார். இவ்வாறு அவர் அஹ்மதிய்யத்திற்கு மிக அருகில் வந்து விட்டார். ஜமாஅத் நூல்களைப் படித்தார். 2008 ஆம் ஆண்டில் ரோனி சாஹிபிற்கு பைஅத் செய்வதற்கான நற்பாக்கியம் கிடைத்தது. அஹ்மதிய்யத்தில் நுழைந்த பிறகு மிகப்பெரும் மாற்றம் அவரது வாழ்க்கையில் ஏற்பட்டது. இவரிடத்தில் இந்த மகத்தான புரட்சி எப்படி ஏற்பட்டது என்று இவரது மனைவி வியப்புடன் பார்க்கின்றார். அவரது ஏதாவதொரு நன்மை அல்லாஹ்வுக்கு விருப்பமானதாக இருந்திருக்கின்றது. அதன் காரணமாக அல்லாஹ் அவருக்கு இத்தகைய மகத்தான கண்ணியத்தை வழங்கியுள்ளான். முதலாவதாக அவருக்கு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளும் நற்பாக்கியம் கிடைத்தது. முழு உலகத்தையும் அஹ்மதிய்யத்திற்காக அவர் துறந்தார். பிறகு ஷஹாதத்தின் உயர் தகுதியும் அவருக்கு கிடைத்தது. இவர் ஐவேளை தொழுகைகளை தவிர தஹஜ்ஜுதும் தொழுது வந்தார். ஜமாஅத் நூல்களை தொடர்ந்து படித்து வந்தார். முறையாக சந்தாக்களை செலுத்தி வந்தார். மிகவும் வீரமிக்கவராக அவர் திகழ்ந்தார். அஹ்மதியாக இருந்து வந்த அந்த இரண்டு வருடங்களில் அவர் மிகவும் அதிகமாக தப்லீக் செய்து வந்தார். இவரது தப்லீகின் விளைவாக பல பைஅத்துகள் நடந்தன. இவர் தொடர்பான இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால் நான் ஷஹீதாக மரணிக்க விரும்புகின்றேன் என்று இவர் பலமுறை கூறி வந்தார். அல்லாஹ் அவரது இந்த ஆசையை நிறைவேற்றி விட்டான். ரோனி பெஸானி சாஹிப் அவர்களின் ஷஹாதத்தும் அஹ்மது மஸோனா சாஹிப் அவர்களின் ஷஹாதத் போன்றே இருந்தது. எதிரிகள் இவரையும் கத்திகளாலும் கம்புகளாலும் தாக்கினார்கள். இவரது சடலமும் வெளியே இழுத்து கொண்டு வரப்பட்டு அதனோடும் எதிரிகள் அவமரியாதையாக நடந்து கொண்டார்கள். சடலத்தின் உருவமும் சிதைக்கப்பட்டது.

இந்த மக்களுக்கு அல்லாஹ் சுவர்க்கத்தைப் பற்றிய நற்செய்தியை வழங்கியுள்ளான். இவர்கள் நிரந்தர வாழ்வைப் பெற்றவர்களாக ஆகிவிட்டார்கள். அஹ்மதிய்யத்தின் வானத்தில் ஒளிவீசும் நட்சத்திரங்களாக இவர்கள் இருக்கின்றார்கள். அல்லாஹ் இவர்களின் தகுதிகளை உயர்த்திக் கொண்டே செல்வானாக. இவரை சார்ந்திருப்பவர்களுக்கு பொறுமையையும் தைரியத்தையும் வழங்குவானாக. அவனே அவர்களை பாதுகாப்பவனாகவும் அவர்களுக்கு உதவி செய்பவனாகவும் இருப்பானாக. இந்தோனேஷியா ஜமாஅத்திலுள்ள ஒவ்வொரு நபரது ஈமானுக்கும் முன்பை விட அதிகமாக வலிமையை அல்லாஹ் உருவாக்குவானாக. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது கஷ்ஃப் காட்சி ஒன்றை குறிப்பிட்டு அதில் சாஹிப்ஸாதா அப்துல் லத்தீஃப் சாஹிப் அவர்களை பின்பற்றிச் செல்கின்ற அவர்களைப் போன்ற வேறு சில மக்களும் தமக்கு கிடைப்பார்கள் என்று கூறியிருக்கின்றார்கள். அதில் மிக தொலைவிலுள்ள பகுதிகளில் வாழ்கின்ற இந்த மக்களும் அடங்குவர். இவர்களில் பலரும் அஹ்மதிய்யத்தின் கலீஃபாக்களில் ஒருவரைக் கூட பார்த்ததில்லை. ஆனால் இவர்களது ஈமானின் வலிமை ஈடு இணையற்றதாகும். கிலாஃபத்தின் மீது இவர்களுக்கு இருக்கும் பற்று பின்பற்றத்தக்க உயர்வான முன்மாதிரியாக இருக்கின்றது. கடந்த சில குத்பாக்களில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை)அவர்களின் இந்த கஷ்ஃப் காட்சி தொடர்பாக நான் கூறியிருந்தேன். அதை மீண்டும் கூறுகின்றேன்.

**அந்த கஷ்ஃப் காட்சி பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

கஷ்ஃப் காட்சியில் நான் பார்த்தேன். நமது தோட்டத்திலிருந்து மிகவும் உயரமான ஃபிர் மரத்தின் பசுமையான கிளை ஒன்று வெட்டப்பட்டது. இந்த கிளையை மீண்டும் பூமியில் நட்டி விடுங்கள் என்று நான் கூறினேன். அதன் மூலம் அந்த கிளைகள் வளர்ந்து அவற்றில் பூக்கள் பூக்கும்.

**அவர்கள் தொடர்ந்து கூறுகின்றார்கள்:**

அவரது இடத்தில் அதாவது சாஹிப்ஸாதா அப்துல் லத்தீஃப் சாஹிப் அவர்களது இடத்தில் நிற்கின்ற அவரது பல பிரதிநிதிகளை அல்லாஹ் உருவாக்குவான் என்றே நான் இந்த கஷ்ஃபுக்கு விளக்கம் கூறுகின்றேன். இந்த ஷஹீதுகள் இந்த உயர்வான தகுதியைப் பெற்று நாம் பின்பற்றத்தக்க உயர்வான முன்மாதிரியை நமக்காக விட்டு சென்றுள்ளார்கள். உலகை விட்டு பிரிந்து தங்களது எஜமானன் முன்னால் சென்று விட்டார்கள். காதியானிலிருந்து ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் அவர்கள் இருந்தாலும் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மையை நிரூபிப்பவர்களாக அவர்கள் திகழ்கின்றார்கள். பின்னால் இருக்கின்ற நாமும் நமது ஈமானின் நிலையை எல்லா சமயங்களிலும் ஆய்வு செய்து பார்க்க வேண்டும். இந்த கொடூரச் செயல்களின் காரணமாக நாம் நமது ஈமானை வீணாக்காமல் இருப்பதுடன் மட்டுமல்லாமல் நமது ஈமானில் மேலும் முன்னேறுவதற்கு முயற்சி செய்வோம். இன்ஷா அல்லாஹ் என்று ஒவ்வொரு ஷஹாதத்திற்குப் பிறகும் நாம் உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும். நமது மரபுகளுக்கும் நமது பொறுமைக்கும் களங்கம் ஏற்படும் வகையிலள்ள எந்த செயலையும் நாம் செய்யமாட்டோம். நமது நாட்டுப்பற்றுக்கு களங்கம் ஏற்படும் எந்த செயலையும் செய்ய மாட்டோம். ஜமாஅத்தின் ஒவ்வொரு நபரும் அவர் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் அந்த நாட்டின் மீது பற்று கொண்டவராக அவர் இருப்பார். அவ்வாறு இருக்கவும் வேண்டும். எப்போதும் அவர் அவ்வாறு இருக்கவும் வேண்டும். இன்ஷா நாட்டுப்பற்று நம்மிடம் எதிர்பார்ப்பது என்னவென்றால் நம்மீது கருணை காட்டத் தெரியாத எந்தவொரு ஆட்சியாளரும் நம்மீது தமது ஆதிக்கத்தை செலுத்தக் கூடாது என்று நாம் துஆ செய்ய வேண்டும். உலகத் திட்டங்களின் அடிப்படையில் சட்டங்களை செயல்படுவதற்கான முயற்சியை நாம் செய்வோம். ஆனால் சட்டத்தை ஒருபோதும் நாம் கையில் எடுக்கமாட்டோம். சட்டங்களை சார்ந்திருப்பதை விட நாம் நமது எஜமானர் முன்னால் குனிவதன் பக்கமே அதிகம் நம்பிக்கை வைப்போம். அவனிடம் துஆ செய்தவாறு அல்லாஹ்வின் உதவியையே நாம் சார்ந்து நிற்கின்றோம். அவனது கருணையை நாம் நம்பியிருக்கின்றோம். முன்பு போல் இப்போதும் நாம் அல்லாஹ்வின் முன்பே குனிவோம். இந்த துஆவை எப்போதும் செய்து கொண்டிருங்கள்.

**ரப்பனா அஃப்ரிக் அலைனா ஸப்ர(ன்)வ் வஸப்பித் அக்தாமனா ஃபன்ஸுர்னா அலல் கவ்மில் காஃபிரீன்.**

உறுதியான பாதங்களுடன் நிலைத்து நிற்கின்ற நம்மில் எவருக்கும் எந்த தடுமாற்றமும் ஏற்படாமல் அல்லாஹ் பாதுகாப்பானாக!

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி குறிப்பிட்டு ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபாக்களுக்கு பொறுமையையே போதித்தார்கள். இறுதியில் எல்லா எதிரிகளும் அழிந்து விட்டார்கள். ஒரு காலம் அருகாமையில் வர இருக்கின்றது. அப்போது தீங்கு விளைவிக்கும் இந்த மக்கள் தென்படமாட்டார்கள். இந்த தூய ஜமாஅத்தை உலகில் பரப்ப வேண்டும் என்று அல்லாஹ் நாடியுள்ளான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறைவன் விரும்பியிருந்தால் இந்த மக்கள் உங்களுக்கு துன்பம் தராமல் இருந்திருப்பார்கள். துக்கம் தரக்கூடியவர்கள் பிறக்காமல் இருந்திருப்பார்கள். ஆனால் இறைவன் இவர்கள் மூலமாக பொறுமையின் போதனையை நமக்கு வழங்க விரும்புகின்றான்.

யார் நமக்க துன்பங்களைத் தருவார்களோ அவர்கள் தவ்பா செய்வார்கள். அல்லது அழிந்து விடுவார்கள். எனவே, துஆவுடனும் பொறுமையுடனும் தனது நோக்கத்தை அடைவதற்காக முன்னேறிச் செல்வது ஒவ்வொரு அஹ்மதியின் கடமையாகும். அல்லாஹ் நமக்கு பொறுமைக்கான ஆற்றலை வழங்குவானாக. தீங்கு விளைவிக்கும் மக்களை அழித்து விடுவாயாக. அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது

(அலை) அவர்களிடம் செய்துள்ள வாக்குறுதிகள் நிறைவேறுவதைக் காண்பவர்களாக நம்மை ஆக்குவானாக. அல்லாஹ் நம்மை தனது அடைக்கலத்தின் கீழ் கொண்டு வருவானாக. எதிரிகளை பிடிப்பானாக. நமது எதிரிகளுக்கு நம்மிடம் தனிப்பட்ட முறையில் எந்த சொந்தப் பகையும் கிடையாது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீதுள்ள பகைமையின் காரணமாகவே அஹ்மதிகளுடன் இவ்வாறு எதிரிகள் நடந்து கொள்கின்றார்கள்; எல்லை மீறி நடந்து கொள்கின்றார்கள். அல்லாஹ் ஒவ்வொரு எதிரியையும் படிப்பினைக்குரிய அடையாளமாக ஆக்கி வைப்பானாக. அல்லாஹ்வின் பார்வையில் எவர்களது சீர்திருத்தம் ஏற்படாதோ அவர்களை இறைவன் விரைவாக பிடிப்பானாக. காயமுற்றவர்கள் விரைவாக குணமடைய துஆ செய்யுங்கள். காயமுற்ற மூன்று நபர்கள் மருத்துவமனையில் இருக்கின்றார்கள். அவர்களில் இருவர் மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டு விட்டார்கள்.

இந்தோனேஷியாவிலுள்ள அஹ்மதிகளிடம் நான் குறிப்பாக கூறிக் கொள்வது என்னவென்றால் உலகிலுள்ள எல்லா அஹ்மதிகளின் துஆக்களும் உங்களுடன் இருக்கின்றது. உங்களுக்காக தங்களது கவலைகளை வெளிப்படுத்தும் வகையில் பலரும் எனக்கு கடிதம் எழுதியுள்ளார்கள். பல்வேறு இணைதளங்களில் காட்டப்பட்ட இந்த கொடூரச் செயல்களின் காட்சியானது ஒவ்வொரு அஹ்மதியையும் துடிப்பிலும் வேதனையிலும் ஆழ்த்தி விட்டது. இதன் காரணமாக அவர்கள் உங்களுக்காக துஆ செய்கின்றார்கள். அல்லாஹ் ஒவ்வொரு அஹ்மதியையும் தனது பாதுகாப்பில் வைப்பானாக. எதிர்காலத்தில் ஒவ்வொரு அஹ்மதியையும் ஒவ்வொரு தீங்கிலிருந்தும் காப்பாற்றுவானாக. எதிரிகளின் திட்டங்களை அவர்கள் பக்கமே திருப்பி வைப்பானாக.

இப்போது இந்த ஷஹீதுகளுக்காக ஜனாஸா காயிப் தொழுகையை நான் தொழ வைப்பேன். நேற்று லாஹுரிலுள்ள மர்தானில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. ராணுவத்திற்காக ஆட்கள் சேர்க்கின்ற முகாமில் சிலர் ராணுவப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த சமயத்தில் தற்கொலைத் தாக்குதல் நடைபெற்றது. அப்போது பயிற்சியில் ஈடுபட்ட நமது அஹ்மதி இளைஞர் முனீர் அஹ்மத் அவர்களும் இந்த சம்பவத்தில் ஷஹீது ஆகி விட்டார். இவர் ஃபிராண்ட் பெங்குவால் என்ற இடத்தைச் சார்ந்தவர். அவரையும் இந்த ஜனாஸாக்களுடன் நாம் சேர்த்துக் கொள்வோம். அல்லாஹ் இவரை மன்னிப்பானாக.

தமது வாழ்க்கையை இறைவழியில் அர்ப்பணித்த அஹ்மதி முபல்லிக் மஹ்மூது அஹ்மத் சாஹிப் அவர்கள் வஃபாத் ஆகிவிட்டார்கள். இவர் முபஸ்ஸிர் அஹ்மத் சாஹிப் அவர்களின் சகோதரியின் மகனாவார். அல்லாஹ் இவர்களது பெற்றோர்களுக்கும் தைரியத்தையும் பொறுமையையும் வழங்குவானாக.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**

**ON 11.02.2011**

Translated by : **Maulvi M. RAFEEQ AHMAD H.A.**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**